## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-6 - பாமருமூவுகலும்
## (எம்பெருமானது குணம் அழகு முதலியவற்றை மனத்தால் அநுபவித்து, அவனை நேரில் கண்டு அநுபவிக்க ஆசைப்பட்டு ஆழ்வார் மனமுருகிக் கூப்பிடுதல்)

3392 * பாமரு மூவுலகும் படைத்த *
பற்பநாபாவோ? *
பாமரு மூவுலகும் அளந்த *
பற்பபாதாவோ? **
தாமரைக் கண்ணாவோ! * தனியேன்
தனியாளாவோ! *
தாமரைக் கையாவோ! * உன்னை
என்று கொல் சேர்வதுவே? 1

3393 என்று கொல் சேர்வது? அந்தோ! * அரன்
நான்முகன் ஏத்தும் * செய்ய
நின் திருப்பாதத்தை யான் * நிலம்
நீர் எரி கால் ** விண்ணுயிர்
என்றிவை தாம் முதலா * முற்றுமாய்
நின்ற எந்தாயோ! *
குன்றெடுத்து ஆநிரை மேய்த்து * அவை
காத்த எம் கூத்தாவோ! 2

3394 காத்த எம் கூத்தாவோ! * மலை ஏந்திக்
கல்மாரி தன்னை *
பூத்தண்துழாய் முடியாய்! * புனை
கொன்றை அஞ்செஞ்சடையாய்! **
வாய்த்த என் நான்முகனே! * வந்து என்
ஆருயிர் நீயானால் *
ஏத்தரும் கீர்த்தியினாய்! * உன்னை
எங்குத் தலைப்பெய்வனே? 3

3395 எங்குத் தலைப்பெய்வன் நான்? * எழில்
மூவுலகும் நீயே *
அங்குயர் முக்கண் பிரான் *
பிரம பெருமானவன் நீ **
வெங்கதிர் வச்சிரக்கை *
இந்திரன் முதலாத் தெய்வம் நீ *
கொங்கலர் தண்ணந்துழாய் முடி *
என்னுடைக் கோவலனே! 4

3396 என்னுடைக் கோவலனே! * என்
பொல்லாக் கருமாணிக்கமே! *
உன்னுடை உந்தி மலர் * உலகம்
அவை மூன்றும் பரந்து **
உன்னுடைச் சோதி வெள்ளத்து * அகம்பால்
உன்னைக் கண்டு கொண்டிட்டு *
என்னுடையாருயிரார் * எங்ஙனே
கொல் வந்தெய்துவரே? 5

3397 வந்தெய்துமாறு அறியேன் * மல்கு
நீலச்சுடர் தழைப்ப *
செஞ்சுடர்ச் சோதிகள் பூத்து * ஒரு
மாணிக்கம் சேர்வது போல் **
அந்தரமேல் செம்பட்டோடு * அடி
உந்தி கை மார்வு கண் வாய் *
செஞ்சுடர்ச் சோதி விடவுறை *
என் திருமார்பனையே 6

3398 என் திருமார்பன் தன்னை * என்
மலைமகள் கூறன் தன்னை *
என்றும் என் நாமகளை * அகம்பால்
கொண்ட நான்முகனை *
நின்ற சசி பதியை * நிலம்
கீண்டு எயில் மூன்றெரித்த *
வென்று புலம் துரந்த *
விசும்பாளியைக் காணேனோ! 7

3399 ஆளியைக் காண்பரியாய் * அரி காண்
நரியாய் * அரக்கர்
ஊளையிட்டு அன்று இலங்கை கடந்து *
பிலம்புக்கொளிப்ப **
மீளியம் புள்ளைக் கடாய் * விறல்
மாலியைக் கொன்று * பின்னும்
ஆளுயர் குன்றங்கள் செய்து *
அடர்த்தானையும் காண்டுங்கொலோ? 8

3400 காண்டுங்கொலோ? நெஞ்சமே! * கடிய
வினையே முயலும் *
ஆண்திறல் மீளிமொய்ம்பின் *
அரக்கன் குலத்தைத் தடிந்து **
மீண்டும் அவன் தம்பிக்கே *
விரிநீர் இலங்கை அருளி *
ஆண்டு தன் சோதி புக்க *

அமரர் அரி ஏற்றினையே 9

3401 ஏற்றரும் வைகுந்தத்தை * அருளும்
நமக்கு * ஆயர் குலத்து
ஈற்றிளம் பிள்ளை ஒன்றாய்ப் புக்கு *
மாயங்களே இயற்றி **
கூற்றியல் கஞ்சனைக் கொன்று * ஐவர்க்காய்க்
கொடுஞ்சேனை தடிந்து *
ஆற்றல் மிக்கான் * பெரிய
பரஞ்சோதி புக்க அரியே 10

3402 * புக்க அரியுருவாய் * அவுணன்
உடல் கீண்டுகந்த *
சக்கரச் செல்வன் தன்னைக் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன **
மிக்க ஓராயிரத்துள் * இவை
பத்தும் வல்லார் அவரை *
தொக்குப் பல்லாண்டிசைத்துக் *
கவரி செய்வர் ஏழையரே 11

**அடிவரவு:** பாமரு என்று காத்த எங்கு என்னுடைய வந்து என்திரு
ஆளி காண்டு ஏற்ற புக்க ஏழை